### பல்கலை வேந்தராக முதலமைச்சர்தான் இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லையாம்!

# த.வெ.க. அரசு உயர்கல்வித் துறை அமைச்சர் பேசுவது, வன்மையான கண்டனத்திற்குரியது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, மே 31-

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலமும் பெறாத ராக்கெட் வேகக் கல்வி வளர்ச்சியைத் பெற்றுள்ள தமிழ்நாட்டில், பல்கலைக் கழகங்களுக்கு வேந்தராக ஆளுநரே இருக்கலாமாம்; முதலமைச்சர்தான் இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லையாம்! தமிழ்நாட்டுக் கல்விப் புரட்சி வரலாறு தெரியாமல், உயர்கல்வித் துறை அமைச்சர் இப்படிப் பேசுவது, வன்மையான கண்டனத்திற்குரியது! கல்வித் துறை பற்றிய திட்டவட்ட கொள்கை நிலைப்பாட்டை தாமதிக்காமல் அறிவிக்கவேண்டியது அவசர, அவசியமாகும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:

புதிதாக அமைந்துள்ள முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் கட்சி தனிப்பெரும்பான்மை இல்லாவிடினும், அதிக இடங்களில் வெற்றி பெற்றிருந்த நிலையில், “ஆட்சியில் அதிகாரத்தில் பங்கு” என்ற பேரவாவுடன், புதிய ஆட்சி அமைவதற்கு முன்பிருந்தே ரகசியத் தொடர்புகளைப் பேணி வந்த காங்கிரஸ் கட்சி, பின்னர், தி.மு.க.வுடன் இருந்த கூட்டணியை வெளிப்படையாக முறித்துக்கொண்டது.

வடநாட்டிலிருந்து வந்த காங்கிரஸின் ஒருங்கிணைப்பாளர் ஒருவரும், இந்த உள்விவகாரங்களைத் தொடக்கம் முதல் கவனித்து வந்த பிரவீன் சக்ரவர்த்தி மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் உள்ளிட்டோரும் த.வெ.க. கட்சியின் அலுவலகத்திற்கு ஓடோடிச் சென்று கூட்டணியில் இணைந்து, ஆதரவு தந்தது. மேலும், இந்தக் கூட்டணி இப்போது மட்டுமல்லாமல், வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலிலும், அதற்குப் பிறகும்கூட தொடரும் என்று காங்கிரஸ் கட்சி தானாகவே அறிவித்தது.

**தங்களது சுயநலப் போக்கை!**

இதற்கான முயற்சிகளை மேற்கொண்டவர்களில் ஒருவர், முன்பு தி.மு.க. கூட்டணி என்பது ‘‘கொள்கைக் கூட்டணி’’ என்று கூறிவந்தார். ஆனால் இப்போது அதற்கு முற்றிலும் மாறாக, “அது வெறும் தேர்தல் கூட்டணிதான்; தேர்தல் கூட்டணி மட்டும்தான்” என்று கூறி தங்களது தன்மையைக் காட்டிக் கொண்டனர்.

தி.மு.க. தலைமையில் உள்ள கூட்டணியில் போட்டியிட்டு, காங்கிரஸ் கட்சி சார்பில் வெற்றி பெற்ற அய்ந்து சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவைக் கொடுத்து, இரண்டு அமைச்சர் பதவிகளைப் பெற்றுள்ளனர்.

அதைப் பெற்றுப் பொறுப்பேற்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் விசுவநாதன் அவர்கள், செய்தியாளர்கள் சந்திப்பில், எடுத்த எடுப்பிலேயே, “முந்தைய அரசின் கொள்கைகளை நாங்கள் பின்பற்றவேண்டிய அவசியமில்லை. பல்கலைக் கழகங்களுக்கு வேந்தராக ஆளுநரே இருக்கலாம்; முதலமைச்சர்தான் இருக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை. ஆளுநருடன் ஒத்துப் போவதுதான் சரி” என்ற கருத்தில் செய்தியாளர்களிடம் பேசியுள்ளார்.

அதனால், பலரது கேள்விகளுக்கு அவர் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

கல்வித்துறையில் ஓர் அமைதிப் புரட்சியை ஏற்படுத்திய தமிழ்நாடு!

‘உயர்கல்வித் துறை’ என்பது, உயர் கல்விக்கான துறையாக மட்டுமல்லாமல், கல்வி நிலையைத் தமிழ்நாட்டில் உயர்த்திய துறையாகவும் அமைந்தது தான் தமிழ்நாட்டின் சிறப்பு! இந்நாட்டின் பெரும்பாலான மக்கள் ஒடுக்கப்பட்டு, வாய்ப்பு மறுக்கப்பட்டு, மனுதர்மம் கோலோச்சிய நாட்டில், குலதர்மக் கல்வி கொண்டு வந்து திணிக்கப்பட்ட வரலாற்றை மாற்றியமைத்தது, காமராசரின் கல்விப் புரட்சி. அதை மேலும் பெருக்கிய அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் ஆட்சிகளில், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலமும் பெறாத ராக்கெட் வேகக் கல்வி வளர்ச்சியைத் தமிழ்நாடு பெற்றுள்ளது. எல்லா மாவட்டங்களிலும் பல்கலைக்கழகங்கள், உயர்படிப்புகள் என கல்வித்துறையில் ஓர் அமைதிப் புரட்சியை இவர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

தமிழ்நாட்டில் ஓர் ஆளுநரின் ஒத்துழையாமையையும் தாண்டிப் பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. பல்கலைக்கழகங்களில் ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளைத் திணிக்கும் ஆளுநரின் முயற்சிகளுக்குக் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின. இந்த நிலையில், சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர் காலவரையறை இன்றி நிறுத்தி வைப்பதைக் கண்டித்து உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தப்பட்டது. ‘‘மசோதாக்களை ஆளுநர் காலவரையற்று நிறுத்தி வைத்து, ஊறுகாய் ஜாடியில் ஊற வைக்கக் கூடாது’’ என்று நீதிமன்றமே சுட்டிக்காட்டும் அளவுக்குத் தமிழ்நாடு ஒரு பெரிய வரலாற்றை உருவாக்கியுள்ளது.

**திட்டமிட்டுக் காலதாமதம்!**

ஒன்றியத்தில் உள்ள பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். அரசு, உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மறுக்க முடியாததால் குறுக்கு வழியைக் கையாண்டது. இதன்படி, குடியரசுத் தலைவர் மூலமாகஉச்சநீதிமன்றத்திடம், ‘கருத்துரை’ என்ற பெயரில் ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்து,திட்டமிட்டுக் காலதாமதத்தை ஏற்படுத்தியது.

தமிழ்நாட்டில் உள்ள 11 பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் நியமிக்கப்படாமல் இருக்கும் தற்போதைய சூழ்நிலை, உயர்கல்வியில் தமிழ்நாடு அடைந்துள்ள ‘திராவிட மாடல்’ ஆட்சியின் இமாலயச் சாதனைகளை மறைக்கும் வகையில், கல்விக் கண்களைக் குத்தும் முயற்சியில் ஈடுபடக்கூடாது. மாநில உரிமைகளை எக்காரணம் கொண்டும் விட்டுக்கொடுக்கக் கூடாது. அதேநேரத்தில், ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின் மனுதர்மக் கண்ணோட்டத்துடனான கல்வித் திணிப்பு முயற்சிகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய மிக முக்கியமானதொரு காலகட்டத்தில் நாம் இருக்கிறோம்.

**இந்தக் கருத்து யாருடைய முடிவு?**

ஜோசப் விஜய் தலைமையில் அமைந்த கூட்டணி ஆட்சி, இந்தப் பிரச்சினையில், எப்படி? என்ன நிலைப்பாடு எடுக்கப் போகிறது? ஒன்றிய பா.ஜ.க. அரசின் முட்டுக்கட்டை முயற்சிகளை எப்படி எதிர்கொள்ளப் போகிறது? என்ற கேள்விகள் எழுந்துள்ள முக்கிய தருணத்தில், காங்கிரஸ் கட்சியின் சார்பில் அமைச்சராக உள்ள உயர்கல்வித் துறை அமைச்சர் விசுவநாதன் அவர்கள் இப்படி கூறியிருப்பது,

அவரது கருத்தா?

அவர் சார்ந்த கட்சியின் கருத்தா?

அவருக்கு அமைச்சர் பதவி தந்த முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களது கொள்கை முடிவா?

என்ற சந்தேகங்களை ஏற்படுத்தும் கேள்விகளுக்கு இடந்தரும் நிலையில், அவரது பேட்டி அமைவது சரியானதல்ல. “ஊடகங்களில் தவறுதலாகப் போட்டுவிட்டார்கள்” என்ற சமாதானம் தொலைக்காட்சி - வீடியோ காலத்தில் எடுபடக் கூடியதல்ல!

ஊழல் சாம்ராஜ்ஜியத்தின் உற்பத்திக் கூடாரமான ‘நீட்’ போன்ற தேர்வுகளில் உயிர்ப் பலி வாங்கும், கார்ப்பரேட், லஞ்ச லாவண்ய போக்குகளும், சி.பி.அய். விசாரணைகளும் நடப்பதால், ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், பதவி விலக வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் முதல் பொதுவானவர்கள் வரை கேட்டு வரும் நிலையில், தமிழ்நாட்டு உயர்கல்வித் துறையின் புதிய அமைச்சராகப் பொறுப்பேற்ற ஒருவர் இப்படித் தெளிவின்றி பேசுவதும், பின்னர் மறுப்பதும் சரியான தொடக்கமா?

**வன்மையான கண்டனத்திற்குரியது!**


‘கொள்கைக் கூட்டணி இல்லை, பதவிக் கூட்டணிதான்’’ என்றால், எப்படி வேண்டுமானாலும் பேசலாமா? தமிழ்நாட்டுக் கல்விப் புரட்சி வரலாறு தெரியாமல் இப்படி பேசுவது, வன்மையான கண்டனத்திற்குரியதல்லவா?

சமதர்மத்தின் குரல் ஒலிக்கவேண்டிய இடத்தில், மனுதர்மக் குரல் ஒலித்தால், தமிழ்நாடு ஒரு போதும் அதை ஏற்காது!

**அவசர, அவசியம்!**

முதலமைச்சர், உயர் கல்வி, பள்ளிக் கல்வித் துறை உள்ளிட்ட கல்வித் துறை பற்றிய தம் அரசின், திட்டவட்டமான கொள்கை நிலைப்பாட்டைத் தாமதிக்காமல் அறிவிக்கவேண்டியது அவசர, அவசியமாகும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணிகண்டனம் தெரிவித்து உள்ளார்.




### கழக மாநில கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர்

# சேர்காடு கென்னடி மணி விழா - பணி நிறைவு பாராட்டு விழா!

## பொதுச் செயலாளர் துரைமுருகன் – டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. வாழ்த்துரை!

வேலூர், மே 31-

வேலூர் வடக்கு மாவட்டம், காட்பாடி தொகுதியில் வாழ்ந்து வரும், கழக மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் சேர்காடு. கென்னடி அவர்களுக்கு வரும் 2.6.2026 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில், பணி நிறைவு பாராட்டு விழா மற்றும் மணிவிழாவும், காட்பாடி விருதம்பட்டு, ஆல்காட் நினைவாலய அரங்கத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன் தலைமை தாங்கிட, மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை செயலாளர் (ம) முரசொலி தமிழ் மன்றம் நிறுவனர் சி.கோபி வரவேற்றிட, என். பரமசிவம், என்.தேவநேசன், எச் அரிகிருஷ்ணன், நித்யகுமார், சு.கெஜராஜ், கோவி.அழகிரி ஆகியோர் முன்னிலை வகிக்க,

கழக பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் துரை முருகன், வேலூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி மற்றும் கிங்ஸ்டன் கல்விக் குழுமத் தலைவர் சங்கீதா கதிர் ஆனந்த் ஆகியோர் பாராட்டி வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இதில் மாநகர துணை மேயர் சுனில்குமார், ஒன்றிய குழு தலைவர் வேல் முருகன், மாநகர மண்டல தலைவர் புஷ்பலாதா, ஒன்றிய செயலாளர்களான ஆர்.கே.தேவேந்திரன், எஸ்.சரவணன், வன்னிய ராஜா, வி.தயாநிதி, கருணாகரன், தணிகாசலம், ஜி.ரமேஷ், பிரம்மபுரம் பழனி, எல், ரவிச்சந்தின், பரமசாத்து ரவி, கே.சீதாராமன், நேரு, ஏ.கே முருகன், முருகபெருமாள், கே.தயாளமூர்த்தி. லோகநாதன், வாசுகி கோடீஸ்வரன், டீடா சரவணன், சீனிவாசன் சா.பரிமளம், கிருபாகரன், கே.ஏ. கண்ணன், சாந்தகுமார், ஸ்டாலின் தயாநிதி, முடினாம்பட்டு குப்பன், மரு.கோவி தூயவன் மற்றும் பலர் வாழ்த்துகின்றனர்.

முடிவில் மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் சேர்காடு கென்னடி ஏற்புரை ஆற்றிட, நித்யா பிரியா பியூலா (மனைவி) கெ.சாரதா மேரி (மகள்) ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

இந்த நிகழ்வை முரசொலி தமிழ் மன்றம் ஏற்பாடு செய்கிறது.

### தகுதித் தேர்வில் விலக்கு அளிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு:

# வீர வசனம் பேசாமல் ஆசிரியர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பீர்!

## முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிக்கை!



சென்னை, மே 31-

“TET தேர்வு, ஆசிரியப் பெருமக்களைப் பாதுகாக்கும் பணியில் உடனே இறங்குங்கள். தயவுசெய்து வீரவசனம் வேண்டாம்” என்றும், “இன்று உச்சநீதி மன்றத்தில் நடைபெற்ற சீராய்வு மனுக்கள் மீதான விசாரணையில், ஏற்கனவே பணியில் உள்ள ஆசிரியர்களுக்குத் தகுதித் தேர்வில் இருந்து முழுமையாகவிலக்கு அளிக்கதிட்டவட்டமாக மறுத்துள்ளதோடு, மேலும் ஓராண்டு கால நீட்டிப்பும் வழங்கி இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது” என பள்ளிக் கல்வித்துறையின் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

“பணியில் இருக்கும் ஆசிரியர்கள் அனைவருக்கும் ஆசிரியர் தகுதித் தேர்வு”(TET) கட்டாயம் என 01.09.2025 அன்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆசிரியர்கள் பதவி உயர்வு பெறுவதற்கும், பணியில் தொடர்வதற்கும் ஆசிரியர் தகுதித் தேர்வு கட்டாயம் எனவும், இரண்டு ஆண்டுகளுக்குள் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறுதல் அவசியம் என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

தமிழ்நாட்டில் உள்ள லட்சக்கணக்கான மூத்த ஆசிரியர்களைப் பாதுகாக்கும் வகையில், திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் திமுக தலைவர் மு.க. ஸ்டாலினின் அறிவுறுத்தலின்படி தீர்ப்பு வந்த மறுநாளே, எனது தலைமையில் உடனடியாக ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. ஆசிரியர் சங்க பொறுப்பாளர்களை அழைத்து இரண்டு முறை விரிவான கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தினோம்.

ஒரு ஆசிரியர் கூட உச்சநீதிமன்ற தீர்ப்பினால் பாதிக்கப்படாத வகையில் தமிழ்நாடு அரசு ஆசிரியர்களுக்குத் துணை நிற்கும் என்ற உத்தரவாதத்தை வழங்கியதால், ஆசிரியர்கள் மனச்சுமையின்றி பணியாற்றும் சூழலைத் திராவிட மாடல் அரசு உருவாக்கியது. மேலும், அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களோடு நானும் பள்ளிக் கல்வித்துறை உயரதிகாரிகளும் உடனடியாக ஆலோசனை நடத்தினோம்.

தொடர்ந்து, உச்சநீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர்களைக் கொண்டு சீராய்வு மனுவைத் தாக்கல் செய்வது என்றும், மூத்த ஆசிரியர்கள் ஒருவர் கூட பாதிக்கப்படாமல் தமிழ்நாடு அரசு தொடர்ந்து பாதுகாக்கும் என்றும், ஆசிரியர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருக்கத் திராவிட மாடல் அரசு துணை நிற்கும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் விரிவான அறிக்கையின் மூலம் தெரிவித்தார்.

உச்சநீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர்களைக் கொண்டு சீராய்வு மனுவினைத் தாக்கல் செய்வதற்கு, ‘வில்சன் அல்ல வின்சன்’ என்று முத்தமிழ் அறிஞர் கலைஞரால் பாராட்டப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் வில்சன் உள்ளிட்ட வழக்கறிஞர்களோடு தமிழ்நாடு அரசு ஆலோசனை நடத்தி, உச்சநீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது.

திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்திலும் இது குறித்து ஆலோசனை வழங்கினார். இந்தியா முழுவதும் உள்ள ஆசிரியர்களைப் பாதுகாக்கப் நாடாளுமன்றத்தில் சட்டத்திருத்தம் கொண்டுவர வலியுறுத்த வேண்டும் என்கிற அன்றைய முதலமைச்சரின் அறிவுரைப்படி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி நேரத்தில் சட்டத்திருத்தம் குறித்து வலியுறுத்தினார்கள். இத்தகைய தொடர் நடவடிக்கைகள் மூலமாக ஆசிரியர் சமூகத்தைக் காத்து வந்தது தி.மு.க அரசுதான் என்பது ஆசிரியர்கள் அனைவரும் நன்கு அறிவர்.

இத்தகைய நிலையில், இன்று உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற சீராய்வு மனுக்கள் மீதான விசாரணையில், ஏற்கனவே பணியில் உள்ள ஆசிரியர்களுக்குத் தகுதித் தேர்வில் இருந்து முழுமையாகவிலக்கு அளிக்கதிட்டவட்டமாக மறுத்துள்ளதோடு, மேலும் ஓராண்டு காலநீட்டிப்பும் வழங்கி இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பதவி உயர்வுக்குத் தகுதித் தேர்வு கட்டாயம் என்பதில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. பல்வேறு நீதிமன்ற தீர்ப்புகளால், ஆரம்பப் பள்ளித் தலைமை ஆசிரியர் முதல் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் உள்ளிட்ட பல்வேறு பதவி உயர்வுகள் வழங்கப்படாததால் நிர்வாகப் பணியிடங்களில் சுணக்கம் ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

இது பல ஆண்டுகால அனுபவமுள்ள மூத்த ஆசிரியர்களுக்குப் பெரும் சுமையாகவே அமையும். திராவிட மாடல் அரசின் சிறப்பு முயற்சியால் ஆசிரியர்களைப் பாதுகாப்பதற்காக சிறப்பு தகுதித் தேர்வு நடத்தப்படும் என்று அரசாணை: 231, நாள் 25.10.2025 அன்று வெளியிடப்பட்டது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஆசிரியர் தகுதித் தேர்வில் ஆசிரியர்களின் நலன் கருதி, தேர்ச்சி பெறுவதற்கான மதிப்பெண்ணில் 5 சதவீதத் தளர்வும் வழங்கப்பட்டது. இதனால் ஏராளமான ஆசிரியர்கள் பயன்பெற்றுள்ளார்கள்.

மேலும், சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வில் அனைத்து ஆசிரியர்களுக்கும் உதவிடும் வகையில், அதற்கான பயிற்சிக் கட்டகங்கள் (Training Modules) தயாரிக்கும் பணி மற்றும் இணையவழிப் பயிற்சி வழங்கும் பணியானது, ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திடம் (SCERT) ஒப்படைக்கப்பட்டது. ஆனால், ஜூலை மாதம் முதல் வாரம் ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்தப்பட உள்ள நிலையில், இதுவரை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கட்டகங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இணையவழிப் பயிற்சி குறித்தும் எவ்வித அறிவிப்பும் இல்லை. ஆகவே, ‘ரீல்ஸ்’ அரசாகத் திகழும் இன்றைய தமிழ்நாடு அரசு வீரவசனம் பேசி அனைத்தையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதுபோல, இவ்விரண்டையும் எளிதாகக் கடந்து சென்றுவிடாமல் உடனடியாக நம்முடைய ஆசிரியர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

ஒன்றிய அரசை வலியுறுத்தி, நாடாளுமன்றத்தில் சிறப்புச் சட்டத்திருத்தம் கொண்டு வரச்செய்து, தமிழ்நாடு மட்டுமல்லாது இந்தியா முழுமைக்குமாகப் பணியில் உள்ள மூத்த ஆசிரியர்களைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பயிற்சிக் கட்டகங்கள் மற்றும் இணையவழிப் பயிற்சி குறித்தும் தெளிவான விளக்கம் அளிக்க வேண்டும். எங்கள் குடும்ப உறுப்பினர்களான ஆசிரியர்களுக்கு எப்போதும் நாங்கள் துணை நிற்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்”.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



மலேசியாவில் நடைபெற்ற உலக அளவிலான கராத்தே போட்டியில் 8, 9 வயதிற்கான 25 கிலோ பிரிவில் தங்கம் வென்ற படியூரைச் சேர்ந்த மாணவர் ஜி.மோகித் பிரசாத்துக்கு கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சால்வை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார். இதில் காங்கேயம் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.கே.சிவானந்தன், அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட அமைப்பாளர் கே.சண்முகசுந்தரம் உள்பட பலர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில், பூம்புகார் சட்டமன்ற தொகுதி தி.மு.க. “கள ஆய்வுக் கூடம்” ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பேசினார் உடன் தலைமைக் கழகத்தால் சிறப்புப் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் டி.இசை தூத்துக்குடி மாநகர செயலாளரும், மாநகராட்சி மேயருமான ஜெகன்பெரியசாமி, மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமை கழக வழக்கறிஞர் மு..தினேஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.